


இலங்கைக்கு வருகை தந்த மேலை நாட்டவர்களுள் பிரித்தானியர்கள் முக்கிய இடம் வகிக்கின்றனர். இதற்கு முன்னர் இலங்கைக்கு வருகை தந்த போர்த்துக்கேயராலும் ஒல்லாந்தராலும் கரையோரப் பிரதேசங்களில் ஒரு பகுதியை மட்டுமே தமது ஆட்சிக்குள் கொண்டு வர முடிந்தது. எனினும் 1796 இல் ஒல்லாந்தரிடமிருந்து கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றிய பிரித்தானியரால் 1815இல் மலையக இராச்சியத்தைக் கைப்பற்றியதன் மூலம் முழுநாட்டையுமே தமது ஆதிக்கத்திற்கு உட்படுத்திக் கொள்ள முடிந்தது. இவ்வாறு நாடு முழுவதையும் தமது ஆதிக்கத்திற்கு உட்படுத்திய பின்னர் அரசியல், பொருளாதார, சமூக, கலாசாரத் துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்திய வண்ணம் 1948 பெப்ரவரி 4ஆந் திகதிவரை ஒன்றரை நூற்றாண்டுகளாக எமது நாட்டை ஆட்சி செய்தனர். இவ்வத்தியாயத்தைக் கற்பதன் மூலம் இலங்கை மீது பெருஞ் செல்வாக்குச் செலுத்திய பிரித்தானியரின் இலங்கை வருகை தொடர்பாகவும், இலங்கையில் அவர்கள் தமது ஆட்சியை நிறுவியமை தொடர்பாகவும் அறிந்து கொள்ளலாம்.

### பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றுவதில் செல்வாக்குச் செலுத்திய பின்னணி

கீழைத்தேச வர்த்தகத்தின் மூலம் ஒல்லாந்தர் அதிக இலாபம் ஈட்டுவதைக் கண்ட பிரித்தானியர், அவ்வியாபாரத்தைத் தமதாக்கிக் கொள்ளும் எண்ணத்துடன் 1600 ஆம் ஆண்டில் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியை நிறுவினர். முதன்முறையாக 1664இல் பிரான்ஸியர் பிரெஞ்சு கிழக்கு இந்திய வர்த்தக கம்பனி ஒன்றையும் உருவாக்கினர். வெகு விரைவில் கீழைத்தேச வர்த்தக உரிமையைப் பெற்றுக் கொள்வதில் இவ்விரு சாராருக்கும் இடையே போட்டி உருவானது. இந்தவகையில் இந்துசமுத்திர ஆதிக்கத்தைத் தமதாக்கிக் கொள்வதில் இலங்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்ட பிரித்தானியரும், பிரான்ஸியரும் திருகோணமலைத் துறைமுகத்தின் மீது தமது கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தனர்.

## இலங்கைமீது பிரித்தானியர் கவனம் செலுத்தியமைக்கான காரணங்கள்

★ **கேந்திர நிலைய முக்கியத்துவம்**

❖ இந்து சமுத்திரக் கடற்பாதையின் மத்தியில் இலங்கை அமைந்திருந் தமை.

❖ இந்தியாவின் கிழக்குக் கரையினதும் (மலபார்), மேற்குக் கரையினதும் (கொரமெண்டல்) கடற்படை, வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வது வசதியாயிருந்தமை.




இந்து சமுத்திரத்தின் வர்த்தகப் பாதை



இலங்கையின் அமைவிடம்

❖ வடகீழ்ப் பருவக்காற்றுக் காலங்களில் பெருந்தொகையான கப்பல்களைப் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கக்கூடிய திருகோணமலைத் துறைமுகம் இலங்கையில் காணப்பட்டமை.


திருகோணமலைத் துறைமுகம்

❖ இந்தியாவில் ஆட்சியை அமைத்துக் கொள்வதில் பிரான்ஸியருடனான போட்டியிலிருந்து இந்துசமுத்திரக் கடலாதிக்கத்தைத் தமதாக்கிக் கொள்வதற்குத் திருகோணமலைத் துறைமுகம் அவசியமாக அமைந் தமை.

★ **வியாபார முக்கியத்துவம்**

- ❖ ஐரோப்பாவுக்குக் கொண்டு செல்லப்பட்ட கறுவாவில் இலங்கையின் கறுவா முக்கியத்துவம் பெற்றிருந்தமை.
- ❖ கீழைத்தேச நாடுகளுடனான வர்த்தகத்தின் மூலம் போர்த்துக் கேயரும் ஒல்லாந்தரும் பெற்று வந்த இலாபத்தை பிரித்தானியர் தமதாக்கிக் கொள்ளும் ஆவல் கொண்டிருந்தமை.
- ❖ மிளகு, ஏலம், கராம்பு, முத்து, மாணிக்கம், யானைத்தந்தம் போன்ற வர்த்தகப் பொருட்கள் இலங்கையில் கிடைக்கப் பெற்றமை.

பிரித்தானியர் இரு சந்தர்ப்பங்களில் இலங்கை முழுவதையும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தமை.

1. 1796 ஆம் ஆண்டு கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றுதல்.
2. 1815 இல் நாடு முழுவதையும் கைப்பற்றுதல்.

**பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொள்ளுதல்**

1658 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் ஒல்லாந்தர் வசமிருந்தன. ஐரோப்பாவில் ஆங்கிலேயரும் ஒல்லாந்தரும் நண்பர்களாயிருந்தனர். ஆகையால் ஆசியாவில் ஒல்லாந்தருடன் மோதலை ஏற்படுத்திக்கொள்ள அவர்கள் விரும்பவில்லை. இருப்பினும் மலையக மன்னனுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் ஒல்லாந்தர் வசமுள்ள கரையோரப் பிரதேசங்களைக் குறிப்பாகத் திருகோணமலைத் துறைமுகத்தைத் தமதாக்கிக் கொள்வதற்கான நடவடிக்கைகளில் பிரித்தானியர் ஈடுபட்டனர்.
எனினும் அவ்வாறான முயற்சிகள் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்தன.

- ❖ இதற்கிடையே 1789 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பிரான்ஸியப் புரட்சியின் பின்னர் (8 ஆந் தரப் பாடநூலில் பிரான்சியப் புரட்சி பற்றி நீங்கள் கற்றுள்ளீர்கள்), பிரான்சில் உருவான குடியரசினால் ஒல்லாந்து ஆக்கிரமிக்கப்பட்டு, அங்கே, ''பட்டேவியக் குடியரசு'' எனும் புதிய அரசாங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது.
- ❖ இவ்வேளையில் ஒல்லாந்த இளவரசரான (ஸ்டெட்ஹோல்டர்) ஒறேஞ் வில்லியம் பாதுகாப்புக் கருதி இங்கிலாந்திற்குத் தப்பி ஓடினான்.
- ❖ இலங்கையைக் கைப்பற்றும் எண்ணத்துடன் இருந்த பிரித்தானியர் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு வில்லியம் இளவரசனிடம் கடிதம் ஒன்றைப் (கியூ கடிதம்) பெற்று வந்து (கியூ மாளிகையிலிருந்து பெற்று வந்ததால் கியூ கடிதம் என அழைக்கப்பட்டது), இலங்கையில் இருந்த ஒல்லாந்த ஆளுநரிடம் சமர்ப்பித்தனர். இலங்கையில் இருந்த

ஒல்லாந்த ஆட்சிப் பிரதேசங்களைப் பிரான்சியர் தமதாக்கிக் கொள்வதனைத் தடுப்பதற்காகத் தற்காலிகமாக அப்பிரதேசங்களைப் பிரித்தானியரிடம் ஒப்படைக்கும்படி அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

❖ அக்காலகட்டத்தில் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தை ஆண்டு கொண்டிருந்த ஒல்லாந்த ஆளுநரான ஃபன் எங்கல் பெக் இதற்கு இணங்கவில்லை. எனவே பிரித்தானியர் தாமதிக்காது தமது தாக்குதலை ஆரம்பித்தனர். இவ்வாறு ஒல்லாந்தரின் ஆதிக்கத்தைத் தோற்கடித்து கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டவர்கள் ஆங்கில கிழக்கிந்திய வர்த்தக கம்பனியினராவர்.

முதலில் திருகோணமலையைத் தாக்கிய பிரித்தானியர், 1795 ஆகஸ்ட் மாதத்தில் அதனைக் கைப்பற்றியதுடன் யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி, காலி, கொழும்பு ஆகிய பிரதேசங்களையும் படிப்படியாகக் கைப்பற்றிக் கொண்டனர். 1796 பெப்ரவரி ஆகும் போது ஆளுநர் ஃபன் எங்கல் பெக் இலங்கையில் இருந்த ஒல்லாந்த ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்கள் அனைத்தையும் ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டார். இலங்கையில் ஒல்லாந்தர் வசமிருந்த சகல கரையோரப் பிரதேசங்களும் பிரித்தானியரின் ஆட்சிக்கு உட்பட்டன.

### இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் பிரித்தானியரின் ஆட்சி

பிரித்தானியர் மூன்று சந்தர்ப்பங்களில் வெவ்வேறு விதமாக இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை நிர்வகித்தனர்.

- ♦ ஆங்கில கிழக்கிந்திய வர்த்தக கம்பனியின் ஆட்சி (1796 - 1798)
- ♦ இரட்டை ஆட்சி (1798 - 1802)
- ♦ முடிக்குரிய ஆட்சி (1802)




1796இல் இலங்கையில் பிரித்தானியர்ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்கள்

## ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியினரின் ஆட்சி

பிரித்தானியருக்குச் சொந்தமான கரையோரப் பிரதேசத்தை 1796 - 1798 வரையான முதலிரு வருடங்களில் ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியினரே ஆட்சி செய்து வந்தனர். கரையோரப் பிரதேசத்தைக் கைப்பற்றிய வர்த்தகக் கம்பனியே ஆட்சிப் பொறுப்பையும் ஏற்றது. எனவே அப்போது நிலவிய சென்னை ஆட்சி முறையையே இங்கும் அவர்கள் அமுல் செய்தனர். இதனால் இவ்வாட்சி முறை சென்னை ஆட்சி முறை எனப்பட்டது.

உள்நாட்டு உத்தியோகத்தர்களுக்குப் பதிலாக சென்னை அலுவலர்கள் அமர்த்தப்பட்டமை மக்களுக்கு இடைஞ்சல் விளைவிப்பதாக இருந்தது. இதனால் 1797 ஆம் ஆண்டளவில் கரையோரப் பிரதேசங்களில் வர்த்தக நிறுவனத்திற்கு எதிராகக் கிளர்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

### 1797 இன் கிளர்ச்சிக்கான காரணங்கள்

- இதுவரை இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட வரிவிதிப்பு முறைமைக்குப் பதிலாக சென்னையில் கையாளப்பட்ட வரிஅறவிடும் முறைமை இங்கு மேற்கொள்ளப்பட்டமை. இவ்வரிகளை அறவிடுவதற்காக 'அவுமில்தார்கள்' எனப்படும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

- பொருட்களாக வரி அறவிடும் முறைக்குப் பதிலாகப் பணமாக வரி அறவிட முனைந்தமை, பணப்பாவனை இல்லாத சமூகமொன்றில் இது இடர்ப்பாடாக இருந்தமை.

- வரி அறவிடும் உரிமை ஏல விற்பனையில் விடப்பட்டு, அவை சென்னை உத்தியோகத்தர்களான அவுமில்தார்களால் கொள்வனவு செய்யப்பட்டமை. பொதுமக்களுடைய மொழி, பழக்கவழக்கங்கள் என்பவற்றை அறியாத அவர்கள், கூடிய இலாபத்தை ஈட்டுவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் மக்களுக்குப் பல்வேறு சிக்கல்களை உருவாக்கியமை.

**வரி ஏல விற்பனை முறை**

அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரியை வசூலிக்கும் உரிமையை ஏலத்தில் விற்பது வரி ஏல விற்பனை ஆகும். அரசாங்கத்திற்கு அத்தொகையைச் செலுத்தி அவ்வுரிமையைப் பெறும் நபரால் வரி வசூலித்துக் கொள்ளப்படும்.

❖ தமது உரிமைகளை இழந்த சுதேச உத்தியோகத்தர்கள் பிரித்தானிய நிர்வாகத்தை எதிர்த்தமை.

❖ தென்னைமரவரி, மீன்வரி, உப்புவரி, கள்வரி, சாராயவரி, புகையிலை வரி போன்ற பல்வேறு புதிய வரிகள் விதிக்கப்பட்டமை. இவற்றுள் கிளர்ச்சிக்கான உடனடிக் காரணமாய் அமைந்தது தென்னை வரியாகும்.

❖ தென்னை நாட்டு மக்களின் முக்கிய வருமான வழியாக இருந்ததால் அதிலிருந்து வரியை அறவிட்டு இலாபம் பெறப் பிரித்தானியர் எண்ணினர்.

❖ எனினும் மரத்தின் விளைச்சலைப் பாராது மரங்களுக்கு வரி அறவிடப்பட்டமை மக்களுக்குப் பெருஞ் சுமையாக அமைந்தது.

போக்குவரத்துச் சிக்கல்களும் சிங்கள மக்களின் கெரில்லாப் (மறைந் திருந்து தாக்கும்) போர் முறையும் கிளர்ச்சியை அடக்குவதில் இடர்ப்பாடுகளை விளைவித்தன. 1797 இல் ஆரம்பமான இக்கிளர்ச்சி 1798 மார்ச் மாதம் வரை இடம் பெற்றது.

கிளர்ச்சி அடக்கப்பட்ட பின்னர், அதற்கான காரணங்களைக் கண்டறிவதற் காகப் பிரித்தானிய அரசால் விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. மூவர் கொண்ட இக்குழுவுக்கு கேணல் டி.மியூரன் என்பவர் தலைமை வகித்தார். அதனால் இது ''மியூரன் குழு" என அழைக்கப்பட்டது. பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இக்குழுவினரால் முன் வைக்கப்பட்ட ஆலோசனைகள் வருமாறு

1. வரி ஏல விற்பனை முறை அகற்றப்பட வேண்டும்.
2. புதிதாக விதிக்கப்பட்ட வரிகள் நீக்கப்பட வேண்டும்.
3. வரி அறவீட்டுக்காக நியமிக்கப்பட்ட சென்னை உத்தியோகத்தர்களான அவுமில்தார்கள் நீக்கப்பட்டு, அவர்களுக்குப் பதிலாக உள்நாட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும்.
4. பணத்தின் மூலமே வரிகள் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனை அகற்றப்பட்டு முன்போலவே பொருட்கள் மூலம் செலுத்தும் முறைக்கு இடமளிக்கப்பட வேண்டும்.

### ★ இரட்டை ஆட்சி முறை (1798 - 1802)

பிரித்தானிய அரசாங்கமும் ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியும் கரையோரப் பிரதேசங்களைக் கூட்டாக நிர்வகித்தமை இரட்டை ஆட்சிமுறை எனப்படும்.

பிரித்தானிய அரசாங்கம் குடியியல், பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தம்வசம் வைத்துக் கொண்டு, வருமானம் ஈட்டல், வர்த்தகத்தை மேற்கொள்ளல் ஆகிய பொறுப்புகளை ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியிடம் ஒப்படைத்தது.



பிரட்ரிக் நோர்த்

இரட்டையாட்சி முறையின்கீழ் பிரித்தானிய அரசாங்கத்தால் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை நிர்வகிப்பதற்காக 1798 இல் பிரட்ரிக் நோர்த் அவர்கள் ஆளுநராக நியமிக்கப்பட்டார். ஆட்சியாளர் என்ற முறையில் அவர் நிறுவனத்திற்குப் பொறுப்பாளராவார். அவரின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்கள், வர்த்தக நிறுவன நிர்வாகிகள் என இரு பிரிவினர் செயற்பட்டனர்.

இவர்களிடையே ஒத்துழைப்புக் காணப்படவில்லை. வர்த்தக நிறுவனத்தினர் இயன்றளவு இலாபம் ஈட்டுவதில் அக்கறை செலுத்தினர். பிரித்தானிய அரசாங்க உத்தியோகத்தர்களோ சுதேச முறைகள், பழக்கவழக்கங்கள் பற்றி அனுபவமற்றவர்களாகவும், செயற்றிறன் அற்றவர்களாகவும் காணப்பட்டனர். இதனால் நீண்ட காலம் செல்வதற்கிடையில் இரட்டை ஆட்சி முறை தோல்வியில் முடிந்தது.

### ★ கரையோரப் பிரதேசம் முடியாட்சிக்கு உட்படல் (1802 ~ 1815)

இரட்டையாட்சி தோல்வியுற்றமையால் 1802 இல் இலங்கையின் கரையோரப் பிரதேச ஆட்சி முறை பிரித்தானிய அரசாங்கத்தால் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டது. இதற்கமைய இலங்கை பிரித்தானியரின் குடியேற்ற நாடாக் கப்பட்டது. பிரெட்ரிக் நோர்த் தொடர்ந்தும் பிரித்தானிய ஆளுநராகச் செயற் பட்டார்.

### பிரெட்ரிக் நோர்த் ஆளுநரின் சீர்திருத்தங்கள்

- ❖ உயர் நீதிமன்றங்களை நிறுவுதல்.
- ❖ குடியியல் வழக்குகள் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றங்களை அமைத்தல்.
- ❖ இராசகாரிய முறையை ஒழித்தல்.
- ❖ அரசாங்கத்தின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காக நில அளவை, பொதுவேலை, தபால் திணைக்களங்கள் உருவாக்கப்படல்.
- ❖ வைத்தியசாலைகள் அமைக்கப்படல், அம்மைத் தடுப்பு மருந்து வழங்கப்படல்.

என்பன குறிப்பிடத்தக்கவைகளாகும்.

## ஆளுநர் தோமஸ் மெயிட்லண்டின் ஆட்சி

இலங்கையின் கரையோரப் பிரதேச ஆட்சியாளராக 1805 இல் தோமஸ் மெயிட்லண்ட் நியமனம் பெற்றார். தமது பிரதேசங்களில் பிரித்தானிய ஆட்சியைப் பலப்படுத்துவதற்கு அவரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் வருமாறு:

- உள்நாட்டு உத்தியோகத்தர்களுக்கு உரிய பொறுப்புக்களைக் குறிப்பிட்டு நியமனக் கடிதங்களை வழங்கியமை.
- உள்நாட்டு உத்தியோகத்தர்களின் (முதலியார்களின்) அதிகாரங்களைக் குறைத்தமை.
- ஆளுநர் நோர்த்தினால் ஒழிக்கப்பட்ட இராஜகாரிய முறையை மீண்டும் நிறுவியமை.
- நிர்வாக சேவையாளர்களின் பதவி உயர்விற்குச் சிங்களம் அல்லது தமிழ் மொழி அறிவைப் பெற்றுக் கொள்வதற்குக் கட்டாயப்படுத்தியமை.
- சட்டம், நீதி ஆகிய துறைகளில் சீர்திருத்தங்களை மேற்கொண்டு ஜீரி சபை மூலம் வழக்குகளை விசாரிக்கும் முறையை அறிமுகப் படுத்தியமை.

தோமஸ் மெயிட்லண்டினால் பின்பற்றப்பட்ட இச்செயற்பாடுகளால் கரையோரப் பிரதேசங்களில் பிரித்தானியரின் ஆட்சி சிறப்பாக மேற்கொள்ளப்பட வழி ஏற்பட்டது.

## கண்டி இராச்சியம் கைப்பற்றப்படல் - 1815

1796 இல் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் கைப் பற்றிய பிரித்தானியர் அதன் பின்னர் கண்டி இராச்சியத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிகளை மேற்கொண்டனர். ஆரம்பத்தில் நட்புற வுடன் செயற்பட்ட அவர்கள் பின்னர் அவ் இராச்சியத்தைத் தமது கட்டுப் பாட்டினுள் கொண்டுவர எண்ணினர். இதற்காகக் கண்டியைக் கைப்பற்ற இரு தடவைகள் முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டன.



கண்டி நகரம்

1. 1803 இல் ஆளுநர் பிரட்ரிக் நோர்த்தால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு.
2. 1815 இல் ஆளுநர் ரொபட் பிரவுண்றிக்கினால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு.

### பிரித்தானியர் கண்டி இராச்சியத்துடன் கொண்டிருந்த தொடர்புகள்

பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றுவதற்கு முன்பிருந்தே ஒல்லாந்தருக்கு எதிராக கண்டி அரசனுடன் தொடர்புகளை ஏற்படுத்தும் எண்ணத்துடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் தூதுக்குழுக்களை அனுப்பினர். அவ்வாறு அனுப்பப்பட்ட தூதுக் குழுக்கள் வருமாறு:

1. 1762 இல் பிரித்தானிய வர்த்தக நிறுவனத்தின் சென்னைப் பிரதிநிதியான ஜோன் பைபஸ் கண்டி மன்னன் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனிடம் வருதல்.
2. 1782 இல் பிரித்தானியத் தூதுவரான ஹியூ பொய்ட் இராஜாதி இராஜசிங்கனைச் சந்தித்து, ஒல்லாந்தரை இந்நாட்டிலிருந்து விரட்டுவதற்கு உதவி வழங்குவதாக வாக்குறுதி அளித்தல்.
3. 1795 இல் பிரித்தானிய நிருவாக அதிகாரியான ரொபட் அண்ட்றூஸ் ஒல்லாந்தருக்கு எதிராகப் படையுதவி புரிவதற்காக மன்னன் இராஜாதி இராஜசிங்கனைச் சந்தித்தல்
4. கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றிய பின்னர் 1800 இல் மெக்டோவல் தளபதியின் கீழ் கண்டிக்குப் படை ஒன்றை அனுப்பி மன்னன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்கு ஆளுநர் பிரட்ரிக் நோர்த் எத்தனித்தல். என்றாலும் இம்முயற்சிகள் அனைத்தும் கைகூடாமல் போயின.

### பிரித்தானியர் மலையக இராச்சியத்தைக் கைப்பற்றிக்கொள்ள ஆர்வம் காட்டியமைக்கான காரணங்கள்

- வர்த்தகப் பொருட்களைப் பெற்றுக் கொள்கையில் கரையோரத்திற்கும் மலையகத்திற்கும் இடையில் அமைக்கப்பட்டிருந்த கடவைகளில் வரி செலுத்த வேண்டியிருந்தமை வர்த்தகத்திற்கு இடைஞ்சலாகக் காணப்பட்டது.
- தமது நிருவாகத் தலைமையகமான கொழும்பிற்கும் கடற்படைத் தலைமையகமான திருகோணமலைக்கும் இடையே தரை வழிப் போக்குவரத்தினை நடாத்த கண்டி இராச்சியம் தடையாக இருந்தமை.
- கொழும்பிற்கும், திருகோணமலைக்கும் இடையே கடல்வழி தொடர்புகளை மேற்கொள்வதற்கு அதிக செலவும் நீண்ட காலமும் தேவைப்பட்டமை.

- ❖ கொழும்புக்கும் திருகோணமலைக்குமிடையே பெருந்தெரு ஒன்றை அமைக்க அரசனிடம் அனுமதி கோரிய போதும் அவர் அதற்கு மறுப்புத் தெரிவித்தமை.
- ❖ பாதுகாப்பிற்காகக் கரையோரப் பிரதேசங்களிலும் மலைநாட்டு எல்லைப் புறங்களிலும் இரண்டு படைகளை வைத்துப் பராமரிக்க வேண்டிய தேவை இருந்தமை.
- ❖ பிரித்தானியரது ஆட்சிப் பிரதேசங்களில் ஏற்படும் கிளர்ச்சிகளுக்கு கண்டி மன்னன் ஆதரவளித்தமை.
- ❖ கரையோரப் பிரதேச மக்களும் கண்டி மன்னனையே தமது மன்னனாகக் கருதியமை.
- ❖ பிரித்தானியரை இங்கிருந்து வெளியேற்றுவதற்கு கண்டி மன்னன் பிரான்சியரின் படை உதவியை நாடக்கூடும் என்ற பயம் அவர்களிடம் காணப்பட்டமை.

## பிரட்ரிக் நோத்தின் மலையக ஆக்கிரமிப்பு ~ 1803

பிலிமத்தலாவை மலையகத்தின் அரசனாக விரும்பிய காரணத்தால் ஆங்கிலேய ஆளுநர் பிரட்ரிக்நோர்த்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டான். இது ஆங்கிலேயர் மலையகத்துடன் தொடர்பு கொள்ள வழிவகுத்தது. மலையகத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்கு எதிர்பார்த்திருந்த பிரித்தானியர்களுக்கு வெகு விரைவிலேயே இவ்விராச்சியத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குச் சந்தர்ப்பம் வாய்த்தது. 1802 இல் கரையோரப் பிரதேசங்களில் இருந்து மலையகத்திற்குச் சென்ற முஸ்லிம் வியாபாரிகளுக்கு அங்குள்ள அதிகாரிகள் இடைஞ்சல் விளைவித்து, அவர்களிடமிருந்த ஒரு தொகைப் பாக்கைப் பறிமுதல் செய்தனர். இவற்றினால் ஏற்பட்ட இழப்பிற்கு, நஷ்ட ஈடு வழங்கும்படி ஆளுநர் நோர்த் கோரிக்கை விடுத்தார். இதற்கு மன்னர் செவிமடுக்காமையால், 1803 இல் ஆங்கிலேயர் கண்டிமீது படையெடுத்துச் சென்றனர்.

தளபதி மெக்டோவல் தலைமையில் கொழும்பிலிருந்து கண்டிக்குப் படை ஒன்று செல்ல தளபதி பாபட் தலைமையில் திருகோணமலையில் இருந்தும் மேலும் ஒரு படை கண்டிக்கு வந்தது. இப்படைகளை எதிர்கொள்வது சிரமம் எனக் கருதிய மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனும், நகர மக்களும் கண்டி நகரைக் கைவிட்டு ஹங்குரன்கெத்தைக்குப் பின்வாங்கிச் சென்றனர். எவ்வித இடையூறுமின்றி நகருக்குள் புகுந்த பிரித்தானியப் படையினர், பாதுகாப்புக் கருதி கொழும்புக்குத் தப்பியோடி ஆங்கிலேயரின் பாதுகாப்பிலிருந்த இளவரசன் முத்துசாமியைக் கண்டி மன்னனாகப் பிரகடனம் செய்தனர்.

இளவரசன் முத்துசாமிக்கு மலை நாட்டின் அரசுரிமை இருந்தது. என்றாலும் அவனைப் புறக்கணித்து, இளவரசன் கண்ணுசாமியை ஸ்ரீவிக்ரம ராஜசிங்கன் என்னும் பெயரில் மன்னனாக்கிய போது, இளவரசன் முத்துசாமி தப்பியோடி ஆங்கிலேயரிடம் தஞ்சமடைந்திருந்தான்.



## செயற்பாடு

மேலதிக நூல்களை வாசித்து, 1803 ஆம் ஆண்டு பிரித்தானியரின் மலையக ஆக்கிரமிப்புக்கான காரணங்களையும் அது மேற்கொள்ளப்பட்ட விதத்தையும் அதன் விளைவுகளையும் விவரிக்கும் சிற்றேடொன்றைத் தயாரியுங்கள்.

### பிரித்தானியர் தோல்வியடைதல்

சிறிது காலத்தில் பருவப்பெயர்ச்சி மழை பெய்யத் தொடங்கவே ஆங்கிலேயர் பல இன்னல்களுக்கு முகங்கொடுக்கத் தொடங்கினர். இச்சந்தர்ப் பத்தைப் பயன்படுத்தி மலையகப்படை ஆங்கிலேயரைச் சுற்றி வளைத்துத் தாக்க ஆரம்பித்தது. இவர்களின் கொரில்லாப் போர் முறையால் பிரித்தானியப் படை படுதோல்வி அடைந்து, சரணடைய நேரிட்டது. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னனின் கட்டளைப்படி இளவரசன் முத்துசாமி கொலை செய்யப்பட்டதோடு பிரித்தானியப் படை முற்றாக அழிக்கப்பட்டது. மலைநாட்டுச் சிங்களவரின் ஒற்றுமையாலும் அவர்களின் அரச விசுவாசத்தினாலும், சிறந்த கொரில்லாப் போர் முறையாலும், கண்டியை ஆக்கிரமிக்க நோர்த் ஆளுநரால் மேற் கொள்ளப்பட்ட முயற்சி இறுதியில் தோல்வி கண்டது.

### தோமஸ் மெயிட்லண்டும் மலையக இராச்சியமும்

பிரட்ரிக் நோர்த்தின் பின்னர் 1805 இல் கரையோரப் பிரதேசத்தின் ஆளுநராக வந்த தோமஸ் மெயிட்லண்ட், மலைநாட்டை யுத்தத்தால் வெற்றி கொள்ள முடியாது என்று புரிந்து கொண்டு, அதனுடன் ஒற்றுமையான நட்பு ரீதியான கொள்கை ஒன்றைப் பின்பற்றத் தொடங்கினார். மலைநாட்டுடன் தொடர்புகளைப் பேணுவதற்காக அக்கால நிர்வாக சேவையில் பணியாற்றிய சிறப்புமிக்க உத்தியோகத்தரான ஜோன் டொயிலி என்பவரை நியமித்தார்.

## றொபட் பிறௌன்றிக்கும் கண்டி இராச்சியமும்


றொபட் பிறௌன்றிக்

மெயிட்லண்டை அடுத்து பிரித்தானிய ஆளுநராக 1812 இல் நியமனம் பெற்ற றொபட் பிறௌன்றிக் மலையக இராச்சிய அரசனுடன் வர்த்தக ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்கு முயற்சித்தார். ஆயினும் அது கைகூடவில்லை. இதனால் மலையக இராச்சியத்தை ஆக்கிரமிப்பது அல்லது தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வரவே பிறௌன்றிக் நாட்டங்கொண்டார். அதற்கமைய ஜோன் டொயிலியின் தலைமையில் 1815 இல் மலையக இராச்சியத்தை எவ்வித இடையூறுமின்றித் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அவரால் முடிந்தது.

## பிரித்தானியர்களால் மலையக இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொள்ள முடிந்தமைக்கான காரணங்கள்

❖ **பிலிமத்தலாவையின் செயற்பாடு**

- மலையக இராச்சியப் பிரதானிகளின் அதிகாரம் மிகவும் உச்சமடைந்து, அரசனின் அதிகாரத்தையும் விஞ்சிச் செயற்படுமளவில் வளர்ச்சி அடைந்திருந்தது. அதன் விளைவாக நாயக்கர்குல முறைப்படி இராஜாதிராஜசிங்கனின் மறைவிற்குப் பின் மலையக இராச்சியத்திற்கு உரிமையாளனான முத்துசாமி இளவரசனைப் புறக்கணித்து இளவரசன் கண்ணுசாமியை ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் என்னும் பெயருடன் அரசனாக்க பிரதம பிரதானியான பிலிமத்தலாவையால்முடிந்தது. இவரது நோக்கம், இராஜசிங்கனை சிம்மாசனத்தில் அமர்த்தி விட்டுத் தான் நினைத்தபடி ஆட்சி அலுவல்களை நடத்திச் செல்வதாகும்.இருப்பினும் விரைவிலேயே இருவருக்குமிடையே கருத்து முரண்பாடுகள்ஏற்பட ஆரம்பித்தன.

- 1803இல் பிரித்தானியர் மலையகத்தை ஆக்கிரமித்த வேளையில் பிலிமத்தலாவை தன்னை ஆதரிக்காது பிரித்தானியருக்குச் சார்பாக செயற்பட்டதாகச் சந்தேகித்த மன்னன், பிலிமத்தலாவை உட்பட பிரதானிகளின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டான்.

- **மன்னருக்கும் பிரதானிகளுக்குமிடையே காணப்பட்ட ஒற்றுமை யின்மை வளர்ந்து செல்வதில் கீழ்வரும் காரணிகள் பங்களிப்புச் செய்தன.**

- பிலிமத்தலாவைக்கும் அரசனுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் அதிகரித்துச் செல்கையில் மன்னன் பிலிமத்தலாவையைப் பதவியிறக்கம் செய்தமை.
- மன்னரைக் கொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சதி அம்பல மானதைத் தொடர்ந்து பிலிமத்தலாவை உட்பட அவரது உதவியா ளர்கள் ஏழுபேருக்கு மரண தண்டனை விதித்தமை.
- பிலிமத்தலாவையை அடுத்து பிரதம பிரதானிப் பதவிக்கு எஹல பொலவை நியமித்ததோடு இரண்டாவது பிரதானிப் பதவிக்கு அவரது பகைவரான மொல்லிகொடையை நியமனஞ் செய்தமை.
- மன்னருக்கு விரோதமாகச் செயற்பட்ட பிரதானிகளுக்கும் அவர்களுக்கு ஆதரவு நல்கி உதவி புரிந்தோருக்கும் பல்வேறு தண்டனைகள் வழங்கப்பட்டமை.
- மாம்பிட்டிய திஸாவை, புஸ்ஸெல்லே திஸாவை, பரணதல தேரர் ஆகியோருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டமை.

### எஹலபொல கிளர்ச்சியில் ஈடுபடல்

அரசனின் செயற்பாடுகளால் கோபமுற்ற எஹலபொல மன்னனுக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டார். எதிர்பாராத விதமாகப் பிரித்தானியரினதோ, பிரதானிகளினதோ சப்ரகமுவைப் பகுதி மக்களினதோ ஆதரவு கிட்டாமையால் கிளர்ச்சி தோல்வியுற்றது. எஹலபொல பிரித்தானியரிடம் தப்பி ஓடினார். இதனால் கோபமுற்ற மன்னர் எஹலபொலவின் பிள்ளைகளைக் கொன்று அவரது மனைவி உட்பட, உறவினர்கள் சிலரையும் போகம்பரை வாவியில் மூழ்கடித்துக் கொன்றதாகக் கூறப்படுகின்றது. இதனால் பிரதானிகளுக்கும் அரசனுக்கும் இடையே பகைமை வளரத் தொடங்கியது.

*நீண்ட காலமாக மலையக இராச்சியத்தின் சுதந்திரத்தைக் காப்பதில் செல்வாக்குச் செலுத்திய பொதுமக்களின் அரச விசுவாசம், மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளால் பாதிப்புற்றது.*


இலவச விநியோகத்திற்காக

## பிரித்தானியரின் தந்திரம்

ஆளுநர்களான தோமஸ் மெயிட்லண்டினதும் ரொபட் பிரௌன்றிக்கினதும் வழிகாட்டலின் கீழ் மலையக இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்குப் பொருத்தமான சூழலை உருவாக்கியவர் ஜோன் டொயிலி ஆவார்.

❖ அவர் சிங்கள புத்திஜீவிகளிடமும் பௌத்த குருமாரிடமும் சிங்கள மொழியைக் கற்று, சிங்கள மொழியிலும் மலைநாட்டவரின் பழக்க வழக்கங்களிலும் போதிய அறிவைப் பெற்றிருந்தார்.



பிரதானி எஹலபொல ஆங்கிலேயரைச் சந்தித்தல்

❖ பிலிமத்தலாவை, எஹலபொல, புஸ்ஸெல்லை, மீகேஸ்தென்னை, எக்னெலிகொட ஆகிய பிரதானிகளுடன் தொடர்புகளை வைத்திருந்த டொயிலி, மலை நாட்டிற்கென்றே உளவுச் சேவை ஒன்றையும் உருவாக்கினார்.

❖ மதகுருமார், வியாபாரிகள் போன்ற வேடங்களில் ஒற்றர்களை மலைநாட்டிற்கு அனுப்பி, அப்பிரதேசம் தொடர்பான போதிய அறிவைப் பெற்றுக் கொண்டார்.

❖ மன்னருக்கு ஆதரவான, மற்றும் எதிரான பிரதானிகள் தொடர்பாகவும் மலையகத்தின் இராணுவ வல்லமை பற்றியும் அங்கு காணப்படும் பாதைகள் பற்றியும் யுத்தங்களின் போது மன்னர் பதுங்கும் இடங்களையும் செல்வத்தைப் பதுக்கி வைக்கும் இடங்கள் பற்றிய தகவல்களையும் ஒன்றுதிரட்டிக் கொண்டார்.

❖ மன்னருக்குப் பரிசுப் பொருள்களுடன் பல்வேறு வகையான மது வகைகளையும் அனுப்பி, மன்னரை மதுவுக்கு அடிமையாக்குவதிலும் கவனஞ் செலுத்தினார்.

மதுபாவனையால் மன்னர் உளப் பாதிப்புற்று கொடூரமாக நடக்கத் தொடங்கினார். மேலே குறிப்பிட்ட குரூரமான தண்டனைகள் வழங்குவதற்கு மன்னர் தூண்டப்பட்டமைக்கும் இம் மதுப்பாவனையே காரணமாயிருந்திருக்கலாம். மன்னரின் இச்செயற்பாடுகளால் பிரதானிகள் மட்டுமன்றி, பொது மக்களும் கலக்கமுற்றனர். இதனால் மன்னருக்கு எதிராகப் பிரதானிகளின் ஆதரவைப் பிரித்தானியர் பெற்றுக் கொள்வது இலகுவாயிருந்தது.

## மலையக ஆக்கிரமிப்பு ~ 1815

### ❖ ஆக்கிரமிப்புக்கு வழிவகுத்த உடனடி நடவடிக்கைகள்

- 1814 இல் பிரித்தானியரின் பிரதேசங்களிலிருந்து மலை நாட்டுக்கு வந்த வர்த்தகர்களை ஒற்றர்கள் எனச் சந்தேகித்து, அவர்களது கை, காது, மூக்கு என்பவற்றைத் துண்டித்து வதைத்துத் திருப்பி அனுப்பியமை.
- மலைநாட்டு கிளர்ச்சிக்காரர்களைத் தொடர்ந்து சென்ற கண்டியப் படையினர் பிரித்தானிய ஆட்சிக்குட்பட்ட கிராமங்களுக்குத் தீயிட்டமை.

இந்நடவடிக்கைகளைத் தமக்குச் சார்பாகப் பயன்படுத்திய ஆளுநர் பிரௌன்றிக் 1815 ஜனவரி மாதம் மலையக இராச்சியத்திற்கு எதிராக யுத்தப் பிரகடனத்தைச் செய்தார்.

பிரித்தானியருக்கு மலைநாட்டில் எதிர்ப்புக் காட்டப்படாத சூழ்நிலையில் பிரதானிகள் ஒவ்வொருவராக அவர்கள் பக்கம் சார்ந்தனர். மன்னரின் பிரதம பிரதானியான மொல்லிகொட கூட பிரித்தானியரின் பக்கஞ் சார்ந்து கொண்டார். 1803 இல் பிரித்தானியரின் மலையக ஆக்கிரமிப்பின் போது பிரதானிகளும், பொதுமக்களும் மன்னர் பக்கம் இருந்தமையால் அவர்களால் கண்டியை ஆக்கிரமிக்க இயலாமற் போய்விட்டது. ஆனால் 1815இல் படையெடுப்பின் போது மன்னருக்கு பிரதானிகளினதும் பொதுமக்களினதும் ஆதரவு கிட்டாமையால் குறுகிய காலத்தினுள் மலைநாட்டை பிரித்தானியரால் வெற்றி கொள்ள முடிந்தது.

பிரித்தானியர் கண்டிக்கு வந்தபோது மன்னரும் அவரது மனைவியரும் அரண்மனையைக் கைவிட்டு, மெதமஹநுவர என்னும் இடத்தில் பதுங்கியிருந்தனர். மன்னரைத் தொடர்ந்து சென்ற பிரித்தானியப் படை பிரதானிகளான எஹலபொல, எக்னெலிகொடை ஆகியோரின் உதவியினால் அவரைக் கைது செய்யக் கூடியதாயிருந்தது. கைது செய்யப்பட்டதுடன் அவர் தனது எதிரிகளின் கொடுரங்களுக்கு உட்பட்டாலும் பின்னர் மன்னரும் மகாராணிகளும் மரியாதையுடன் பல்லக்கில் ஏற்றி அழைத்து வரப்பட்டனர். சில தினங்களுக்குப் பின்னர் பிரித்தானியர், மன்னரையும், இராணிகளையும் கொழும்பிற்கு அழைத்து வந்து ''கொன்வோலிஸ்'' எனும் கப்பலில் இந்தியாவுக்கு நாடு கடத்தி வேலூரில் சிறை வைத்தனர்.

## ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன்

1798 ஆம் ஆண்டில் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க எனும் பெயருடன் அரியாசனத்தில் அமர்ந்த நாயக்கர் வம்சத்து கண்ணுசாமி எனும் இளவரசர் ஆரம்பத்தில் மென்மையான குணங்கள் நிரம்பப் பெற்ற ஒருவராகவே காணப்பட்டார். தமது பிரதானிகளின் நடவடிக்கைகளாலும் பிற் காலத்தில் மதுவுக்கு அடிமைப்பட்டதாலும் கொடிய ஆட்சியாளனாக மாறினார். மக்களுக்கு இடைஞ்சல் விளைவிக்கும் தலைவர் களுக்குத் தண்டனை வழங்கி, குடிமக்களின் மனதைக் கவர்ந்த இம்மன்னர் அத்தியாவசியமான பொருட்களுக்கு விலைக் கட்டுப்பாடு விதித்து, மதுவருந்துதல், மிருகங்களைக் கொல்லல் என்பவற்றைத் தடுத்து நாட்டு நலன் கருதிச் செயற்பட்டார். தலதாமாளிகைக்கு மனங் கவரும் பட்டிருப்பை (பத்திருப்பு) கட்டி எழுப்பி, கண்டி வாவியை அலங்கரித்தார். தந்திரம் மிக்க ஆட்சியாளராகத் திகழ்ந்த அவர் நாட்டின் மீது அதீத பற்றுக் கொண்டிருந்தார்.



ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன்

அவர் நாட்டை விட்டுச் செல்கையில் அவரது உள்ளத்தில் உதித்த எண்ணங்கள் கவிதையாக வெளிவந்தபோது அதில் அவரது தாயகப் பற்று மிளிர்ந்த விதம் வருமாறு:

ஒப்பற்ற இலங்கைப் பாரம்பரிய மக்கள் வாழும் வரை
உன்னத மன்னர்குல இரத்தம் என்னில் பாயும் வரை
கண்ணீர்த் துளியும் சிந்தேன் உயிர்வாழும் வரை
இறுதியாக உன்னை வணங்குகின்றேன்
இலங்கைத் தாயே!

## கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி

1594லிருந்து போர்த்துக்கேயரால் பல சந்தர்ப்பங்களிலும் பின்னர் ஒல்லாந்தராலும் 1803 இல் பிரித்தானியராலும் மலை நாடு ஆக்கிரமிக் கப்பட்டாலும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமது தாயகத்தின் சுதந்திரத்தை மலையகத்தினர் பாதுகாத்துக் கொண்டனர். அவர்கள் தமது மன்னன்மீது கொண்டிருந்த விசுவாசமும், தம்மிடையே கொண்டிருந்த ஒற்றுமையும் ஐரோப்பியர்களால் மலைநாட்டைக் கைப்பற்றிக் கொள்ள முடியாமைக்கான காரணங்களாகும். என்றாலும் 1815 இல் ஆக்கிரமிப்பு நிகழும்பொழுது அதன் பிரதானிகளுக்கும் மக்களுக்கும் அரச விசுவாசம் அற்றுப் போனமையால் பிரித்தானியர் மலையக இராச்சியத்தை இலகுவில் கைப்பற்றிக் கொண்டனர். சில நூற்றாண்டுகளாகச் சுதந்திரமாகத் திகழ்ந்த இலங்கையின் மலையக இராச்சியத்தின் முடிவு இறுதியில் இவ்வாறாக அமைந்து விட்டது.

## கண்டி உடன்படிக்கை

யுத்தத்தின் முடிவில் 1815 மார்ச் மாதம் 2ஆந் திகதி கண்டி அரச மண்டபத்தில் ஒன்று கூடிய பிரித்தானிய ஆளுநரான ரொபட் பிரௌன்றிக்குக்கும் மலையக பிரதானிகளுக்கும் இடையே இடம்பெற்ற ஒப்பந்தத்தால் கண்டி இராச்சியம் பிரித்தானியர் வசமானது. பிரித்தானிய மன்னர் மூன்றாம் ஜோர்ஜை பிரதிநிதித்துவம் செய்த ரொபட் பிரௌன்றிக்கும் மலைநாட்டு மக்கள் சார்பில் பிரதானிகள், பிரதேச ஆட்சியாளர்கள், ஏனைய உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவினரும் 1815 மார்ச் 10 ஆந் திகதி இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். பிரதம பிரதானியான எஹலபொலையும் கலகொட திஸாவையும் 1815 மார்ச் 18ஆந் திகதி கையொப்பமிட்டனர். இதுவே 1815 இன் கண்டிய ஒப்பந்தம் எனப்படுகின்றது. இவ் ஒப்பந்தம் இலங்கை வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்ததாகக் குறிப்பிடலாம். இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேலாக தன்னாதிக்கம் நிலவிய சுதந்திர நாடொன்றின் இறுதி வரலாறு இவ்வாறு முடிவுற்றதுடன், முழு நாடும் பிரித்தானிய ஆட்சிக்கு உட்பட்டமை இவ்வொப்பந்தத்தின் மூலம் நடந்தேறியது. இத்துடன் மலையக முடியாட்சி முற்றுப் பெற்றதோடு ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் மன்னர் பதவி துறக்கச் செய்யப்பட்டு முழு நாடும் ஆங்கிலேயர் வசமானது.

**செயற்பாடு**

(வகுப்பிலுள்ள மாணவர்கள் இரண்டு குழுக்களாக பிரிந்து செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும்.)

1 ஒருவர் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் மன்னன் போல் தயாராக வேண்டும். மற்ற சிலரைப் பயன்படுத்தி அரசினின் முடிசூட்டு வைபவம், பத்திரிப்பு, நிர்மாணம், உதவி செய்தல், குளங்களை நிர்மாணித்தல் போன்ற செயற்பாடுகளுடன் கூடிய அரசனின் பாத்திரத்தை நடித்துக் காட்டல்.

2 ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னனின் இறுதி சந்தர்ப்பம் இராணியுடன் ஒழிந்து கொள்ளல் அவர்களை பிரதானிகள் ஆங்கிலேயரிடம் பிடித்துக் கொடுத்தல், அரசனை நாட்டை விட்டு வெளியேற்றல் போன்ற சந்தர்ப்பங்களை நடித்து காட்டுதல்.

**வாரியப்பொல ஸ்ரீ சுமங்கல தேரரின் வீரம்**




வாரியபொல ஸ்ரீ சுமங்கல தேரரால் பிரித்தானியக் கொடி இறக்கப்பட்டு திரும்பவும் சிங்கக் கொடி ஏற்றப்படல்

1815 மார்ச் 2 ஆந் திகதி கண்டிய ஒப்பந்தம் கைச் சாத்திடுவதற்குத் தீர்மானிக் கப்பட்டிருந்தது. ஒப்பந்தம் கைச்சாத்திடப் படுவதற்கு முன்னர் கண்டி அரச மண்டபத்தில் பிரித்தானிய இராணுவ வீரன் ஒருவன் சிங்கக் கொடியை நிலத்தில் போட்டுவிட்டு ஆங்கிலக் கொடியை ஏற்றினான். பல நூற்றாண்டுகளாகக் காப்பாற்றி வரப்பட்ட சுதந்திரம் இல்லாமல் போனதைச் சகித்துக் கொள்ள முடியாத வாரிய பொல ஸ்ரீ சுமங்கல தேரர், கடும் கோபமுற்று அவர் உடனே முன்வந்து ‘‘ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் உங்களுடைய கொடியை ஏற்றுவதற்கு இடமளிக்க முடியாது. அதனை ஏற்ற வேண்டியது ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னரே’’ என்று கூறிக்கொண்டு ஆங்கிலேயரின் கொடியைக் கீழே போட்டு விட்டு, மீளவும் சிங்கக் கொடியை ஏற்றினார். ஆங்கிலேயருக்கு எதிராக சுதந்திரத்தை நாடி மேற்கொள்ளப்பட்ட முதல் நடவடிக்கையாக இதனைக் கருதலாம். இவ்விடத்தில் பிரித்தானிய படைவீரன் ஒருவன் பிக்கு மீது பாய்ந்தாலும் டொயிலியின் தலையீட்டினால் அது சமாதானமாகத் தீர்க்கப்பட்டது.

இழந்து விட்ட சுதந்திரத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்காக 1818 இல் மேற்கொள்ளப்பட்ட முதலாவது சுதந்திரப் போரின்போது தலதா மாளிகையில் இருந்த புனித தந்தத்தை எடுத்துச் சென்று இரகசியமான முறையில் கிளர்ச்சிக்காரரின் கையில் கொடுத்ததும் இத்தேரர்தான் அப்போராட்டம் தோல்வியில் முடிந்தபோது இராஜதுரோக சதிக்குற்றச் சாட்டின் பேரில் அவர் குற்றவாளியாக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் சிறை வைக்கப்பட்டார். சுமங்கல தேரரின் வீரத்தை பிரித்தானியப் பேரரசும் மதித்ததாகக் கூறப்படுகிறது. 1821 இல் அவர் விடுதலை செய்யப்பட்டார்.


**1815 ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட மலைநாட்டுத் தலைவர்கள்**

| | |
|---|---|
| மொல்லிகொட | மில்லாவ |
| பிலிமதலாவ | கலகம |
| ரத்வத்த | ஏஹலபொல |
| மொனரவில ~ கெப்பட்டிப்பொல | கலகொட |
| துல்லேவ | |


கண்டிய ஒப்பந்தத்தில் இடப்பட்ட பிரதானிகள் கையொப்பங்களில் சில

**மலையக ஒப்பந்தத்தின் பன்னிரு வாசகங்களுள் முக்கியமான சில வாசகங்கள்**

- மலபாரைச் சேர்ந்த நாயக்க வம்சத்தவர்களுக்கு மலையகச் சிம்மாசன உரிமை அகற்றப்பட்டு III ஆம் ஜோர்ஜ் மன்னருக்கு அது வழங் கப்படுகிறது. (வாசகம் 1)
- உள்நாட்டு அதிகாரிகளின் பதவிகள், உரிமைகள்,சலுகைகள், அதிகாரங் கள் பாதுகாக்கப்படும். பழைய சம்பிரதாயங்களின் படியே மலையகம் ஆளப்படும். (வாசகம் 4)
- பௌத்த மதம், வணக்கஸ்தலங்கள், புனித இடங்கள், பௌத்த குருமார்கள் பாதுகாக்கப்படுவர். (வாசகம் 5)



கண்டிய ஒப்பந்தத்தின் ஒரு பகுதி

- ஆளுநரினால் விதிக்கப்பட்டாலன்றி, மரண தண்டனைகள் விதிக்கப் படக்கூடாது. (வாசகம் 7)
- பொதுமக்களின் குடியியல், குற்றவியல் வழக்குகள் சுதேச உத்தி யோகத்தரினால் சம்பிரதாய முறைப்படி விசாரிக்கப்படும். (வாசகம் 8)

**சுதந்திரப் போர் ~ 1818**

1815 ஒப்பந்தத்தின்படி மலைநாட்டின் நிர்வாகத்தைக் கொண்டு நடத்துவதற்காக பிரௌன்றிக் ஆளுநரால் தனது பிரதிநிதியாக (ரெஸிடன்ட்) ஜோன் டொயிலி நியமிக்கப்பட்டார். அவரின் தலைமையில் ஆணைக் குழு ஒன்றின் மேற்பார்வையின்கீழ் மலைநாடு ஆட்சி செய்யப்பட்டது.

மலைநாட்டைப் பிரித்தானிய முடிக்குரியதாக்கிய பின்னர் தாம் புரிந்த செயலின் பாரதூரம் மலையகப் பிரதானிகளுக்கும் பொது மக்களுக்கும் புரிய ஆரம்பித்தது. தமது முன்னோர்களால் உயிர்த்தியாகங்களுடன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பாதுகாக்கப்பட்ட தாய்நாட்டின் சுதந்திரத்தைத் தாமே வெளிநாட்டவருக்கு ஒப்படைத்துவிட்டதை உணரத்தலைப்பட்டனர். பிரித்தானியருக்கு மலை நாட்டை ஒப்படைத்ததற்காக அவர்கள் மனம் வருந்தினர்.

இதுவரை தமது கௌரவத்திற்குப் பாத்திரமாயிருந்து தாம் பாதுகாத்து வந்த அரசரை இழந்துவிட்டோம், தற்பொழுது அரசர் இல்லாத கதியற்ற மக்களாகிவிட்டோம் என்ற உணர்வு அவர்களை ஆட்கொண்டது.

சாதாரண மக்கள் மாத்திரமன்றி பௌத்த குருமாரும் கூட மனச் சஞ்சலமுற்றதாகக் கண்டிய ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் செங்கடகலையில் இருந்து தத்தமது ஊர்களை நோக்கிச் செல்கையில் பிக்கு ஒருவர் பாடிய பின்வரும் பாடலிலிருந்து தெரிந்து கொள்ளக் கூடியதாயுள்ளது.

ஐயோ எறும்புகளே!
உங்களுக்கு அரசன் ஒருவன் இருக்கிறான்.
எங்களுக்கு அவன் இல்லை
எங்களது வினைகளாலா இது நேர்கிறது?
அரசன் ஒருவன் வாய்ப்பானேயானால்
பலகாரமும், பாற்சோறும் உண்போம்
பெரஹர எடுப்போம்.
'சாது' நாதத்தை முழங்கச் செய்வோம்.

மலைநாட்டில் பிரித்தானியரின் ஆட்சி ஆரம்பிக்கப்பட்டு சிறிது காலத் திலேயே பொதுமக்களுக்கு அதிருப்தி ஏற்படத் தொடங்கியது. மலைநாடு பிரித்தானியருக்கு உரிமையாகி மூன்று ஆண்டுகள் செல்வதற்கிடையில் அவர் களது ஆட்சிக்கு எதிராக புரட்சி இயக்கம் ஒன்று ஆரம்பமானது. 1818 இல் வெல்லஸ்ஸ பிரதேசத்தில் ஆரம்பமான இச்சுதந்திரப் போராட்டத்திற்குப் பங்களிப்புச் செய்த காரணிகள் பலவாகும்.

**1818 சுதந்திரப் போருக்கு பின்னணியாய் அமைந்த காரணிகள்**

மிகத் தொலைவில் வசிக்கின்ற காணமுடியாத அரசனால் தம்நாடு ஆளப்படுவது மலைநாட்டினருக்கு பொருத்தமற்ற, பழக்கமற்ற ஒன்றாய் அமைந்தமை.

- ♦ தங்கள் கண்களால் காணமுடியாத தூரத்திலிருந்த அரசனுக்குப் பணிந்து நடப்பது கண்டி மக்களால் முடியாத செயலாக இருந்தமை.
- ♦ பிரித்தானிய உத்தியோகத்தர்கள் ஒப்பந்த விதிகளுக்கு அமைவாக நடந்து கொள்ளாமை.
- ♦ பிரதானிகளின் சலுகைகளும் வருமான மார்க்கங்களும் இல்லாமற் போனமை,
- ♦ பிக்குகளை மதிக்காமையும், ஒப்புக்கொண்டபடி பௌத்த சமயத்திற்கு உரிய மரியாதை வழங்கப்படாமையும்,
- ♦ சுதேச மொழி, பழக்கவழக்கங்கள் பற்றி சற்றும் அறியாத பிரித்தானியர்களால் நாடு ஆட்சி செய்யப்பட்டமையால் நாட்டினுள் சஞ்சலமான நிலை உருவானமை.
- ♦ இதுவரை மலையக பிரதிநிதித்துவக் குடும்பங்களுக்கே பட்டம், பதவிகள் வழங்கப்பட்டு வந்தமைக்குப் புறம்பாகவும், கண்டிய ஒப்பந்தத்திற்கு மாறாகவும் ஹஜ்ஜிமரிக்கார் என்பவர் முகாந்திரமாக நியமிக்கப்பட்டமை, 1818ம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்திற்கு உடனடிக் காரணமாய் அமைந்தது.
- ♦ மலைநாட்டு அரசுக்கு உரிமை கோரிக்கொண்டு துரைசாமி என்ற நபர் ஒருவர் ஊவாப் பிரதேசத்தில் தோன்றியமை.

பரம்பரையாக சிங்களத் தலைவர் ஒருவரால் வகிக்கப்பட்ட வெல்லச பிரதேச முகாந்திரம் பதவிக்கு முஸ்லீம் இனத்தைச் சேர்ந்த ஹஜ்ஜி மரிக்கார் என்பவர் நியமிக்கப்பட்டமை 1818ஆம் ஆண்டு கிளர்ச்சிக்கு உடனடிக் காரணமாக அமைந்தது. இது 1815ஆம் ஆண்டு உடன்படிக்கைக்கு எதிரானது எனக் கருதிய பிரதானிகளும், சிங்கள மக்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தாம் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் உறவினர் என்றும் தமக்கு அரசுரிமை உண்டென்றும் கூறிக்கொண்டு ஊவாப் பிரதேசத்திற்கு வந்த ஒருவரைச் சுற்றி ஊவா மக்கள் ஒன்று திரண்டமை.

ஹஜ்ஜி மரிக்காரும் பதுளையிள் உதவி அரசாங்க அதிபரான சில்வெஸ்டர் வில்ஸனும் பிரித்தானியப் படையொன்றுடன் துரைசாமியைக் கைது செய்யச் சென்றனர். அப்போது சிங்களவர்களால் இவர்கள் கொலை செய்யப்பட்டனர். இக்குழப்பகரமான நிலையைக் கட்டுப்படுத்துவதற்காகச் சென்ற பிரித்தானியப் படை குழப்பக்காரர்களுக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்தமையினால் ஏற்பட்ட கிளர்ச்சி, சுதந்திரப் போராட்டமாக மாறி மலைநாடு எங்கும் பரவிற்று.

போராட்டத்தை அடக்குவதற்காக பிரித்தானியர்களால் ஊவாவின் திஸாவையான மொனரவில கெப்பட்டிப்பொல தலைமையில் படையொன்று அனுப்பப்பட்டது. கலவரத்தை அடக்குவதை விடுத்து கலகக்காரர்களுடன் அவரும் சேர்ந்து கொண்டமையால் கலவரம் இன்னும் உக்கிரமடைந்தது.

## கெப்பட்டிப்பொல திஸாவை

அப்போது கெப்பட்டிப்பொல ஊவாவின் திஸாவையாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். 1818இல் கலவரம் ஆரம்பித்தவுடன் அதனை அடக்கும் பணி கெப்பட்டிப்பொலவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பிரதேச மக்கள் அவரைச் சார்ந்து கலவரத்தை நிறுத்திவிடுவார்கள் எனப் பிரித்தானியர் கருதினர். ஆனால் கலவரத்தைக் கட்டுப்படுத்த அனுப்பப்பட்ட அவர், கிளர்ச்சிக்காரர்களுடன் சேர்ந்து கொண்டு, ‘‘உங்களுடைய ஆயுதங்களால் உங்களைத் தாக்க மாட்டேன்’’ என்று கூறி ஆங்கிலப் படைகளை ஆயுதங்களுடன் திருப்பி அனுப்பிவிட்டார். இதனை அடுத்து போராட்டத்தின் தலைமை அவருக்கு உரித்தானது.


கெப்பட்டிபொல திஸாவை

வெல்லஸ்ஸ பிரதேசத்தில் ஆரம்பமானதால் வெல்லஸ்ஸ கலவரம் என்றும் ஊவா பிரதேசமெங்கும் பரவியமையால் ‘ஊவா கலவரம்’ என்றும் 1818 ஆம் ஆண்டுப் புரட்சி என்றும் அறிமுகப் படுத்தப்பட்டாலும் உண்மையில் இது சிங்களவரின் முதலாவது சுதந்திரப் போராட்டம் எனக் கூறுவது மிகவும் சரியானதாகும்.

### சுதந்திரப் போராட்டத் தலைவர்கள்

- மொனரவில கெப்பட்டிபொல திஸாவை
- மடுகல்ல திஸாவை
- திம்புலான திஸாவை
- கிவுலேகெதர மொஹட்டால
- 2ஆம் பிலிமத்தலாவ அதிகாரம்
- பூட்டாவே ரட்டேரால
- கொஹு கும்புரே ரட்டேரால
- கலகெதர மொஹட்டால
- கொடே கெதர அதிகாரம்
- தம்பவின்ன திசாவை

### போராட்டம் பரவலடைதல்

சிங்களவர்கள் இயற்கையான மறைவிடங்களில் பதுங்கியிருந்து கொரில்லாப் போர் முறையைக் கையாண்டபடியால் பிரித்தானியருக்குப் பெருஞ்சேதம் விளைந்தது. மொல்லிகொட, எக்னெலிகொட ஆகிய பிரதானிகள் நீங்கலாக ஏனைய அனைத்துப் பிரதானிகளும் போராளிகளைச் சார்ந்தமையால் பிரித்தானியரின் ஆட்சி மலையகத்திலிருந்து ஒழிக்கப்படும் நிலைக்கு ஆளாகியது. இதற்கிடையே புனித தந்தமும் கிளர்ச்சியாளர்கள் வசமாகவே, அவர்களுக்கு அது சாதகமாக அமைந்துவிட்டது. ஊவாவுக்கு மட்டும் எல்லைப்படுத்தப்பட்டிருந்த போராட்டம் விரைவிலேயே தும்பறை, ஹேவாஹெட்டை, ஹாரிஸ் பத்துவை, மாத்தளை உட்பட பல பிரதேசங்களுக்கும் பரவிச் சென்றது.

### போராட்டத்தைக் கட்டுப்படுத்தல்

போராட்டத்தை அடக்குவதற்காக, கலவரப் பிரதேசம் எங்கும் மார்ஷல் லோ என்னும் இராணுவச் சட்டத்தைப் பிரித்தானியர் பிரகடனப்படுத்தினர். போராளிகளைப் பலவீனப்படுத்தும் நோக்கில் இப்பிரதேசங்களில் உணவுத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் வண்ணம் பிரபுக்களினதும், பொதுமக்களினதும் வீடு வாசல்கள், தோட்டந்துரவுகள், மந்தைகள் விளைநிலங்கள் ஆகிய சகல சொத்து சுகங்களையும் அழித்து ''பாழ்நிலக்'' கொள்கையைக் கையாண்டனர். கொடூரமான வழிமுறைகளைக் கையாண்டு கலவரத்தை அடக்கிய பிரித்தானியர் போராட்டத் தலைவர்களைக் கைது செய்தனர். கெப்பட்டிப்பொல, மடுகல்ல என்போரைக் கைது செய்ததுடன் கலவரம் ஒய்ந்து போய்விட்டது.

இவற்றோடு 1818ஆம் ஆண்டு கலவரம் தோல்வி அடைவதற்குக் கீழ்வரும் காரணங்களும் பங்களிப்புச் செய்தன.

### சுதந்திரப் போராட்டம் தோல்வி அடைந்தமைக்கான காரணங்கள்

- ❖ போராட்டம் முறையான திட்டத்துடன் முன்னெடுக்கப்படாமையும். ஒவ்வொரு பிரதேசத் தலைவர்களுக்கிடையே முறையான தொடர்பாடல் இன்மையும்.
- ❖ போராட்டத் தலைவர்களிடையே தனிப்பட்ட கோபதாபங்கள் இருந்தமையும் பேதங்கள் ஏற்பட்டமையும்.
- ❖ மொல்லிகொட என்ற பிரதம பிரதானி பிரித்தானியர் பக்கம் சார்ந்திருந்தமை அவர்களுக்குப் பெரும் பலமாக அமைந்தமை. மொல்லிகொடவின் கீழிருந்த பிரதேசங்களூடாக மலை நாட்டுக்குச் செல்லும் பாதைகள் அமைந்திருந்தமையால் அவர்களுக்குத் தேவையான இராணுவத்தையும், ஆயுதங்களையும் உணவையும் தடங்கலின்றிப் பெற்றுக் கொள்ள முடிந்தமை.
- ❖ பிரித்தானியர்களால் கையாளப்பட்ட 'பாழ் நிலக்' கொள்கையால் பாதிப்புற்ற மக்கள் போராட்டத்தைக் கைவிட்டமை.

- ❖ பாதுகாப்புக் கருதி ஒழித்து வைக்கப்பட்டிருந்த புனித தந்தம் பிரித்தானியர் வசமானமை.
- ❖ சிம்மாசனத்திற்கு உரிமை கோரிய துரைசாமி எனும் நபர் அதற்குரியவனல்ல என்றும் வில்பாவே எனும் ஊரிலிருந்து தமக்குரிய ஆடைகளை துறந்து விட்டு வந்த பிக்கு என்றும் தகவல்அறிந்தமை.
- ❖ 1818 செப்டம்பர் 21 ஆந் திகதிக்கு முன்னர் சுயவிருப்புடன் சரணடைவோருக்கு உயிர்ப்பிச்சை அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டமை.
- ❖ முஸ்லீம் மக்கள் பிரித்தானியருக்கு ஆதரவளித்தல்.
- ❖ சுதேசிகளால் நவீன ஆயுதங்களை எதிர்கொள்ள முடியாமை.

கைது செய்யப்பட்ட மடுகல்ல, கெப்பட்டிப்பொல ஆகியோர் இராணுவ நீதிமன்றத்தீர்ப்பின்படி தலை துண்டிக்கப்பட்டனர். சுதந்திரப் போருக்குத் தலைமை தாங்கியோரின் சொத்துக்கள் அரசுடமையாக்கப்பட்டன. சில பிரதானிகள் நாடு கடத்தப்பட்டனர். எஹலபொலையும் அதில் ஒருவர் ஆவார்.

இவ்வாறு பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக மலைநாட்டில் முதன்முறையாக மேற்கொள்ளப்பட்ட புரட்சி பெருந்தொகை உயிரழிவுகளுடனும் பேரளவான சொத்துக்களின் இழப்புடனும் முடிவுற்றது. இதனால் இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சி மிகவும் உறுதியாக நிறுவப்படுவதற்கு வழிபிறந்தது.

இது தவிர 1815 ஆண்டு கண்டி உடன்படிக்கைக்குப் பதிலாக 1818ஆம் ஆண்டு கண்டிப் பிரகடனம் வெளியிடப்பட்டது. இதன் வழியாகக் கண்டி சுதேச அதிகாரிகளின் அதிகாரங்கள், சலுகைகள் என்பன பெருமளவில் குறைக்கப்பட்டதுடன், 1815ஆம் ஆண்டு உடன்படிக்கையில் உறுதி அளித்ததற்கு அமைய புத்த சமயத்தையும், பிக்குமாரையும் பாதுகாப்பதென உறுதி அளிக்கப்படவில்லை.

### செயற்பாடு

1818 ஆம் ஆண்டு சுதந்திரப் போருடன் தொடர்புடைய தலைவர்களில் நீர் விரும்பும் ஒருவரைத் தெரிவு செய்து நடித்துக் காட்டுக. வகுப்பில் மாணவர் சிலர் பாத்திரங்கள் ஏற்று நாடகமொன்றினை முன்வைக்கலாம்.

### கோல்புறூக் சீர்திருத்தங்கள் 1833

1818 போராட்டத்தின் விளைவாக நிர்வாக ரீதியான ஆலோசனைகளை வழங்கவென கோல்புறூக் என்பவரும் நீதித்துறை சம்பந்தமான ஆலோசனைகளை வழங்கவென கமறன் என்பவரும் பிரித்தானிய அரசினால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்கள் இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியை உறுதிப்படுத்துமுகமாக பல முக்கிய ஆலோசனைகளை முன்வைத்தனர். இவ் ஆலோசனைகள் 1833 இல் கோல்புறூக் சீர்திருத்தங்களாக நடைமுறைக்கு வந்தன.

- கரையோரத்துக்கென்றும் மலைநாட்டுக்கென்றும் வெவ்வேறாக இருந்த ஆட்சி முறையை அகற்றி, ஒரே ஆட்சியின்கீழ் இலங்கையை ஐக்கியப்படுத்தல். இதன்மூலம் முழு நாட்டிலும் அவர்களுடைய ஆட்சியை நிறுவுதல்.
- ஆட்சி விடயங்களில் ஆளுநருக்கிருந்த அதிகாரங்களை வரையறுத்து, சட்ட சபையையும் சட்ட நிருவாக சபையையும் ஆரம்பித்தல்.
- ஏகாதிபத்தியவாதிகளின் பொருளாதார நடவடிக்கைகளைப் பலப்படுத்தும் வண்ணம் அதுவரை இலங்கையில் இருந்து வந்த தடைகளை அகற்றல். இதற்கமைவாக வெளிநாட்டவர் இங்கு குடியேறுவதற்கும் நிலத்தை வாங்குவதற்கும் இருந்த தடைகள் அகற்றப்பட்டன.
- வர்த்தக விவசாயத்திற்குப் பயன்படுத்தும் நிலத்திற்கு வரி விலக்களித்தல்.
- பெருந்தோட்டத்துறையின் வளர்ச்சிக்காக பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- வங்கி நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தல்.
- முழுநாட்டையும் தமது ஆதிக்கத்துக்குள் வைத்துக் கொள்ளும் வண்ணம் நீதிமன்றத் தொகுதி ஒன்றை ஆரம்பித்தல். அதன்மூலம் கிராம சபை சட்ட திட்டங்களாக அதுவரை இருந்துவந்த சம்பிரதாய முறைகளை ஒழித்து, நீதிமன்றங்களின் மூலம் அவர்களின் அதிகாரத்தை இந்நாட்டில் நிறுவுதல்.
- அரசியல், சமூக, கலாசார விடயங்கள் அனைத்திலும் தமது ஆதிக்கத்தை உறுதிப்படுத்தும் வண்ணம் ஆங்கிலக் கல்வி முறையை அறிமுகப்படுத்தல்.

### சுதந்திரப் போராட்டம் 1848

- பிரித்தானியரின் ஆட்சிக்கு விரோதமாக மலைநாட்டில் ஏற்பட்ட இரண்டாவது சுதந்திரப் போராட்டமே 1848 கிளர்ச்சியாகும். 1818இல் ஏற்பட்ட முதலாவது சுதந்திரப் போராட்டம் பிரதானிகளின் தலைமையில் ஏற்பட்டாலும் 1848 இன் போராட்டத்தில் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக எழுச்சியுற்றவர்கள் சாதாரண குடிமக்களேயாவார். தமது வாழ்வாதாரத் தொழிலை முறையாகச் செய்ய முடியாது போன விவசாயிகளின் போராட்டமாக இதனைக் குறிப்பிடலாம்.
- 1833 இல் செயற்படுத்தப்பட்ட கோல்புறூக் சீர்திருத்தங்களின் பலனாகவே இரண்டாவது சுதந்திரப் போராட்டம் ஆரம்பமானது.

### 1848 சுதந்திரப் போராட்டத்தின் பின்னணிக் காரணிகள்

- கோல்புறூக் சீர்திருத்தங்களின் கீழ் நிர்வாக சேவையாளர்களின் தொகை குறைக்கப்பட்டது. ஆகையால் அச்சேவை நலிவடைந்தது. இதனால் பொதுமக்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் இடையில் இருந்த இடைவெளி அதிகரித்தமை.

- ❖ தேசிய விவசாய நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்தின் உதவி கிட்டாமல் போனமை. கோல்புறூக் சீர்த்திருத்தத்தின் பின்னர் விவசாயிகள் கவனிக்காது விடப்பட்டதோடு பெருந்தோட்டச் செய்கையிலே அரசின் கவனம் ஈர்க்கப்பட்டது.
- ❖ கிராம சபைகளிடம் இருந்த அதிகாரங்கள் நீதிமன்றத்துக்குக் கட்டுப்பட்டபடியால் சிறிய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்குக் கூட வெகுதொலைவில் உள்ள நீதிமன்றங்களுக்குச் செல்ல நேரிட்டமை. வழக்குகளின் போது முத்திரைக் கட்டணம், வழக்கறிஞர்களின் கொடுப்பனவு, இடைச்செலவுகள் என்று பெருந்தொகையைச் செலவிட நேர்ந்தமை.
- ❖ ஸ்ருவர்ட் மெக்கன்ஸி ஆளுநரால் 1840 இல் சமர்ப்பிக்கப்பட்ட தரிசு நிலச் சட்டத்தினால் விவசாயிகளின் பயிர்ச் செய்கைக்கான நிலங்கள் அரசாங்க உடைமையாக்கிக் கொள்ளப்பட்டமையால் மக்களால் பெருந்துன்பங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டமை.
- ❖ இச்சட்டத்தின் மூலம் விவசாயிகள் பயன்படுத்திய அரசாங்க நிலங்கள் வெளிநாட்டவர்களுக்கு விற்கப்பட்டபடியால் அவர்களின் மந்தை மேய்ச்சலுக்கான புற்றரைகள் இல்லாமற் போனமை.
- ❖ பெருந்தோட்டச் செய்கையின் விருத்தியினால் குடிமக்களின் வாழ்க்கை முறைமை சிக்கலுக்குள்ளாகியமை. ஐரோப்பியர்கள், தென்னிந்தியர்கள், முஸ்லிம்கள், கீழைநாட்டுச் சிங்களவர்கள் பெருந்தோட்டச் செய்கையின் தேவைகளுக்காக மலைநாட்டிற்கு வந்தமையால் மலையக மக்களின், சமாதானமான அமைதியான வாழ்க்கை நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டமை.
- ❖ மலைநாட்டில் மதுபானக் கடைகள் திறக்கப்பட்டமையால் ஒழுக்கவீனம் பெருகி சமூகம் சீர்குலையத் தொடங்கியமை.
- ❖ பௌத்த சமயத்தைக் கவனிக்காது விட்டமை.
- ❖ ஆளுநர் டொரிங்டனினால் புதிய வரிகள் விதிக்கப்பட்டமை.
- ❖ இவ்வேளையில் நீலப்புத்தகம் என்று குறிப்பிடப்படும் புள்ளி விவரப் புத்தகத்திற்கு அரசாங்கம் தகவல்களைத் திரட்டிக் கொண்டிருந்தமையால் புதிய வரிகள் விதிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாகப் பிரசாரம் செய்யப்பட்டமை.

1847 ஆம் ஆண்டளவில் ஐரோப்பியச் சந்தையில் கோப்பியின் விலை வீழ்ச்சியுற்றமையால் அரசாங்கத்தின் வருமானம் குறைந்தது. இப்பணப் பற்றாக்குறைக்குப் பரிகாரமாக, ஆளுநர் டொரிங்டன் புதிய வரிகள் பலவற்றை விதித்தார். பின்வருவன அவற்றில் சில வரிகளாகும்.

- கடைகளுக்கான வரி
- படகு வரி
- துப்பாக்கி வரி
- (கரத்தை) வண்டி வரி
- முத்திரை வரி
- நாய் வரி
- படகுத் துறைக்கான வரி
- ஆள்வரி

என்பவை அவற்றில் சிலவாகும்.

இவ்வரிவிதிப்பு 1848 ஆம் ஆண்டுப் போராட்டத்திற்கு உடனடிக் காரணியாக இருந்தது. ஏற்கனவே சமூக, பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டிருந்த பொதுமக்களால் இவற்றைத் தாங்க முடியாதிருந்தது. இப்புது வரிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக மக்கள் ஒன்று திரளத் தொடங்கினர். கொழும்பு, காலி, கண்டி, பதுளை ஆகிய பல்வேறு இடங்களில் வரிவிலக்கு வேண்டி அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் கூட்டங்கள் நடத்தப்பட்டன. கடைசியில் இந்த அசௌகரியமான நிலை அரசாங்க எதிர்ப்பு சுதந்திரப் போராட்டமாக வடிவம் பெற்றது.

வீர புரன் அப்பு, கொங்காலேகொட பண்டா, கடஹப்பொல (குடாபொல தேரர்) பிக்கு ஆகியோர் இப்போராட்டத்திற்குத் தலைமை தாங்கியோருள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

**வீர புரன் அப்பு**

- மொறட்டுவையில் உயன பிரதேசத்தில் பிறந்த வீர ஹென்ன திகே பிரான்சிஸ்கு, 14 ஆம் வயதில் தான் பிறந்த இடத்தை விட்டு கண்டியை நோக்கிப் பயணமானார்.
- தனது நாடு, இனம், மதம் என்பவற்றுக்குத் தன்னை அர்ப்பணிக்கக் கருதிய அவர் மேற்கத்திய பாணியிலான தனது பெயரை 'புரன் அப்பு' என மாற்றிக் கொண்டார்.
- பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக மக்களை ஒன்றுபடுத்தத் தொடங்கிய அவர், 1848இல் சுதந்திரப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.
- கடஹப்பொல தேரரின் வழிகாட்டலின் கீழ் செயற்பட்ட புரன் அப்பு 1848 இல் மாத்தளை மெக்டோவல் கோட்டையைத் தாக்கி அதனைக் கைப்பற்றிக் கொண்டார்.
- பிரித்தானியர்களுக்கு எதிராக வீரப் போராட்டம் நடத்தினாலும் கடைசியில் அவர் கைது செய்யப்பட்டார்.
- 1848 ஆகஸ்ட் 8 ஆந் திகதி பிரித்தானியரின் துப்பாக்கி ரவைகளுக்கு அஞ்சாமல் முகங்கொடுத்து மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

## கடஹபொல தேரர்

- 1848 இல் சுதந்திரப் போராட்டத்திற்குத் தலைமை வகித்த புரன் அப்பு கொங்காலேகொட பண்டா ஆகிய இரு தலைவர்களுக்கும் தேவையான வழிகாட்டுதலை வழங்கி பாதுகாப்பை மேற்கொண்டு, பிரித்தானியருக்கு எதிரான போராட்டத்திற்குத் தலைமை தாங்கி முன்னின்ற பௌத்த பிக்குகளின் பிதாவாக இலங்கை வரலாற்றில் கடஹபொல தேரர் இடம் பெறுகிறார்



கடஹபொல தேரர்

- பல்வேறு துன்பங்களை அனுபவித்தவாறு காட்டில் உள்ள கற்குகை ஒன்றில் பதுங்கி இருக்கையில் பிரித்தானியர்களால் கைது செய்யப்பட்டார்.

- கொங்காலேகொட பண்டா ஒழிந்திருக்கும் இடம்பற்றிய தகவலைத் தந்தால் உயிர்ப்பிச்சை அளிப்பதாகப் பிரித்தானியர்கள் குறிப்பிட்டபோது, 'சிங்களவர்களின் சுதந்திரத்திற்காகப் போராடும் கொங்காலேகொட பண்டாவின் உயிர் எனது உயிரைவிடப் பெறுமதியானது. ஆகையால் கொலை செய்தால் பரவாயில்லை. கொங்காலேகொட பண்டாவின் உயிரைப் பாதுகாப்பது சிங்களவன் என்ற முறையில் நான் செய்யும் பெருஞ் செயலாகும் என்று அவர் குறிப்பிட்டார். இராணுவ நீதிமன்றத்தின் முன் இவ்வீர உரையுடன் அவர் 1848 ஆகஸ்ட் 6ஆந் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

### கொங்காலேகொட பண்டா


கொங்காலேகொட பண்டா

- கொங்காலே கொட பண்டா களனியில் வனவாஸல பிரதேசத்தில் பிறந்த வர்ணபுர தேவகே டேவிட் என்பவராவார்.
- வனவாஸல டேவிட் அல்லது பேலியகொட டேவிட்என்ற பெயராலும் அழைக்கப்பட்டார்.
- வரி எதிர்ப்பு இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்து மலைநாட்டிற்கு வந்த அவர், அங்கு திருமணபந்தத்தில் இணைந்து கொண்டார்.
- பிறகு அவர் கொங்காலகொட பண்டா எனப் பிரசித்தமடைந்தார்.
- கொங்காலேகொட பண்டா சிங்களவர்களின் மன்னனாக 'ஸ்ரீ விக்ரம சர்வசித்தி ராஜசிங்ஹ' எனும் பெயரில் தம்புள்ளையில் முடிசூட்டிக் கொண்டார்.
- 1848 இல் சுதந்திரப் போரின்போது புரன்அப்புவுடன் தலைமைத்துவத்தை ஏற்றுச் செயற்பட்டார்.
- உயிருடன் கைதான அவர் குற்றவாளி என ஒப்புக் கொண்டபடியால், மலாக்காவுக்கு நாடு கடத்தப்பட்டார்.
- சிங்களவரின் வீர புருஷரான கொங்காலகொட பண்டா நோயினால் 1849 டிசம்பர் 1 ஆந் திகதி மரணமானார்.

## 1848 இல் போராட்டம் பரவுதல்

மாத்தளை, தம்புள்ளை, குருணாகலை முதலான பிரதேசங்களில் தீவிரமாகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராளிகள் அரச கட்டடங்கள், காரியாலயங்கள் என்பவற்றை உடைத்து நொறுக்கியதன் மூலம் தமது பிரித்தானிய எதிர்ப்பை வெளிப்படுத்தினர். துப்பாக்கி வரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த துப்பாக்கி உரிமையாளர்கள் அவற்றுடனே போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலே குறிப்பிட்ட பிரதேசங்களில் தமது அதிகாரத்தைப் போராளிகள்

நிலைநிறுத்தக் கூடியதாய் இருந்தது.

### போராட்டத்தை அடக்குதல்

ஆளுநர் டொரிங்டன் இராணுவச் சட்டத்தைப் பிரயோகித்து கடுமையாகப் போராட்டத்தை அடக்கினார். கொங்காலகொட பண்டா, புரன் அப்பு, டிங்கிரிரால ஆகிய தலைவர்கள் சிறைப்படுத்தப்பட்டதுடன் கலவரம் அடங்கியது. இராணுவ நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்ட கடஹபொல தேரர், புரன் அப்பு, டிங்கிரிரால ஆகியோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதோடு, கொங்காலேகொட பண்டாவுக்கு நூறு கசையடிகள் கொடுக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டார்.

### 1848இல் கலவரம் தோல்வியுற்றமைக்கான காரணங்கள்

- போராட்டம் முறையாக ஒழுங்குபடுத்தப்படாமை.
- இக்கால கட்டத்தில் மலையகம் எங்கும் போதிய பாதைகள் அமைக்கப்பட்டிருந்தமையால் இலகுவாகப் போராட்டத்தை அடக்க முடிந்தமை.
- பிரித்தானியருக்குத் தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் மேலதிக படையினரைத் தருவித்துக் கொள்ள முடிந்தமை.
- சிங்களவரிடம் நவீன ஆயுதங்களுடன் பயிற்றப்பட்ட படையணி ஒன்று இல்லாமை.
- மலைநாட்டுப் பிரதானிகளின் ஆதரவு கிட்டாமை.

### 1848 போராட்டத்தின் விளைவுகள்

- ஆளுநர் டொரிங்டன் அவரது செயலாளர் டெனன்ற் ஆகியோர் இலங்கையிலிருந்து இங்கிலாந்திற்குத் திருப்பி அழைக்கப்பட்டார்.
- குற்றவாளிகளாகக் காணப்பட்டோருக்குத் தண்டனை வழங்கப் பட்டதோடு, அவர்களின் சொத்துக்களும் பறிமுதலாயின.
- பொதுமக்களின் எதிர்ப்புக்குள்ளான வரிகள் சில(கடைகளுக்கான வரி, நாய் வரி) அகற்றப்பட்டன.
- சில வரிகள் (முத்திரை, துப்பாக்கி, கரத்தை வண்டி, படகு ஆள்வரிகள்) மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன.
- விவசாயிகள் தொடர்பில் தாம் செலுத்திய கவனம் போதியதாயில்லை என உணர்ந்த பிரித்தானிய ஆட்சியாளர், சுதேச மக்களுக்கு ஆதரவான கொள்கை ஒன்றை வகுக்கத் தீர்மானித்திருந்தனர். அதற்கமைய 1850 இல் இருந்து விவசாயத்தையும் நீர்ப்பாசனத்தையும் விருத்தி செய்வதற்கு அரசினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- வரி நீக்கம் செய்தல், மீள்பரிசீலனை செய்தல், விவசாயத்தையும், கைத்தொழிலையும் முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். என்பவற்றின் மூலம் இந்தப் போராட்டம் நியாயமானது என்பதனைப் பிரித்தானிய ஆட்சியாளரும் ஏற்றுக் கொண்டனர் என்பது தெளிவாகிறது.

தாய்நாட்டின் சுதந்திரத்திற்காக மலை நாட்டவர்களால் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது போராட்டம் இவ்வாறாகத் தோல்வியுடன் முற்றுப் பெற்றது. வெளிநாட்டு ஆதிக்கத்திற்கு எதிராகவும் தேசியத்தின் எழுச்சிக்காகவும் இலங்கையர்களால் மேற்கொள்ளப்பட்ட கடைசிப் போராட்டமாக இதனைக் கருத முடியும். 1948 இல் இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கும்வரை இதுபோன்றதொரு சுதந்திரப் போராட்டம் மீண்டும் ஒருமுறை எழவில்லை.

1848இல் சுதந்திரப் போராட்டத்தைத் தோற்கடித்த பின்னர், பிரித்தானியர் அவர்களுக்குத் தேவையான முறையில் செயற்பட்டு அரசியல், சமூகம், பொருளாதாரம், கலாசாரம் ஆகிய சகல துறைகளிலும் தேசத்தின் பலம், உரிமை, குணநலன்கள் என்பவற்றைப் புறக்கணித்துத் தமது ஆதிக்கத்தை உறுதிப்படுத்திக் கொண்டனர்.

### செயற்பாடு

1. 1818,1848ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற போராட்டங்கள் தொடர்பான பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| போராட்டம் | தலைவர்கள் | செல்வாக்கு செலுத்திய காரணங்கள் | தோல்வியடைய காரணம் | விளைவுகள். |
|---|---|---|---|---|
| 1.1818ஆம் ஆண்டுப் போராட்டம்<br>2.1848ஆம் ஆண்டுப் போராட்டம் | | | | |

2. 1848ஆம் ஆண்டு இடம்பெற்ற போராட்டத்துடன் தொடர்புடைய தலைவர்கள் தொடர்பான விபரங்களைச் சேகரித்து சிறு கையேடு ஒன்று தயார் செய்க.

3. 1848ஆம் ஆண்டு இடம்பெற்ற சுதந்திரப் போராட்டத்திற்கு மிகவும் தாக்கம் செலுத்திய காரணி கோல்புறூக் சீர்திருத்தமா? ஆளுநர் டொரிங்டனின் வரி விதிப்பா? என்ற தலைப்புக்களில் விவாதம் நடாத்துக.

**சுருக்கம்**



- பிரித்தானியரின் அதிகாரத்தை இலங்கையில் உறுதியாக நிலைநிறுத்திக் கொண்ட சந்தர்ப்பங்களும் அதற்காகக் கையாண்ட விதிமுறைகளும்.
- கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொள்ளுதல்.
- 1797 இல் பிரித்தானியருக்கு எதிரான கிளர்ச்சியை அடக்குதல்.
- கரையோரப் பிரதேசத்தை முடிக்குரிய பிரதேசமாக்குதல்.
- கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொள்ளல்
- 1818, 1848ஆம் ஆண்டுகளில் சுதந்திரப் போராட்டங்களை தோற்கடித்து யுத்தச் செயற்பாடுகளின் மூலம் பூரணமான பிரித்தானிய ஆட்சி அதிகாரத்தை இலங்கையில் நிலைநாட்டிக் கொள்ளல்.
- 1833 இல் செயற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களின் மூலம் சட்டவாக்க, நிர்வாகக் கழகங்களை ஆரம்பித்து பாராளுமன்ற ஆட்சி முறையை இந்நாட்டில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பெருந்தோட்டத்துறையை முன்னேற்றுவதற்காக வெளிநாட்டு மூலதனத்தைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டமை.
- ஆங்கிலக் கல்வியைப் பரவலாக்கியதால் ஐரோப்பிய சமூக-கலாசாரத்தை இந்நாட்டில் உருவாக்குவதற்கு நடிவடிக்கைகளை மேற்கொண்டமை.

ஆகிய நடவடிக்கைகள் மூலம் 1848ஆம் ஆண்டு ஆகும் போது, சகல துறைகளிலும் பிரித்தானிய ஆதிக்கம் இந்நாட்டில் நிலைபெறுவதற்கு அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.